# எங்கே எனது கவிதை? – கி.ரா.வின் கன்னிமை

# My Lost Lover - Ki. Ra’s Kannimai

***முனைவர் ந. கார்த்திகாதேவி***
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
சரஸ்வதி நாராயணன் கல்லூரி
மதுரை

**Dr. N. Karthiga Devi**
*Assistant Professor, Department of Tamil*
*Saraswathi Narayanan College*
*Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*கி.ரா.வின் கன்னிமை சிறுகதையில் கரிசல் சமூகத்தில் வாழ்ந்த விவசாயச குடும்பத்தைச் சார்ந்த நாச்சியாரம்மாள் என்ற பெண் பற்றி பேசப்படுகின்றது. முதல் பகுதியில் அவள் மனுஷியாகி கன்னிகாத்த நாட்கள் சொல்லப்படுகின்றன. வேலைக்காராகளுக்கும் பிச்சைக்காராகளுக்கும் பசியாறப் படைக்கிறாள். அடிப்பட்டவன் வீட்டுக்கு பத்துப்பக்கா நெல் அரிசியையும் இரண்டு கோழிகளையும் கொடுத்தனுப்புகிறாள். ஐந்து வீடுகள் தள்ளி உள்ளபுக்க கத்துக்குக் கட்டிக் கொண்டு போகும் போது மாயம்ம லஷ்மியம்ம போயிராவே என்று சகோதரகளால் விடை கொடுத் அனுப்பப்படுகிறாள். இத்துடன் நாச்சியாரம்மாவின் முதல் பகுதி முடிவடைகிறது.*

*இரண்டாம் பிரிவில் வருவது அவள் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்த வாழ்க்கை. இக்காலகட்டத்தில் அவளிடம் எக்குறையுமில்லை. ஆனால் மிகநுட்பமான குணம் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்று விட்டது. குழந்தைகளிடம் சலிப்பு, கூலிகேட்டு வருகிறவர்களிடம் சலிப்பு, அலுத்துக் களைத்து வருகிற கணவரிடம் பணக்கணக்கு கேட்கிற அவசரம். அர்த்த ராத்திரியில் ரூபாய் அணா பைசா கணக்கில் மூழ்கிறகுணம். பழைய நாச்சியாரிடமிருந்து பிரிந்து போன ஏதோ ஒன்று திரும்ப வாராதா என்று ஆதங்கப்படுகிறார் மணந்து கொண்டவன்.*

***முக்கியச்சொற்கள்:*** *கி.ராஜநாராயணன், நாச்சியாரம்மாள், தாய்மை, கன்னிமை, மாற்றம்.*

## Abstract

*Ki.Ra’s short story ‘Kannimai’ Literally meaning ‘Virginhood’ tells the story of Nachiaramma, who transforms much after her marriage. Before her marriage she was much sought after and worshipped by one and all because of her generosity.*

*The same Nachiaramma, after her marriage and motherhood changes a lot and run after money and becomes a miser.*

*In Hindu culture a girl child is worshipped as goddess. But once she is married she lost her god like status and becomes an ordinary woman.*

*Nachiaramma also becomes an ordinary woman, only interested in the well being of her own off springs. Husband and brothers of Nachiaramma wonders about the cause of her change and yearn for the resurrection of good old Nachiaramma.*

***Keywords:*** *K.Raja Rarayanan, Nachiaramma, Motherhood, Virginhood, Change*

**Citation**

Karthiga Devi, N. “My Lost Lover - Ki. Ra’s Kannimai.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 11–16.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20117749*

*மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா !*
*பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்*
*பாரில் அறங்கள் வளரும், அம்மா கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.*

**முன்னுரை**

*சொன்னால் நம்பமுடியாது தான்,*
*நாச்சியாரம்மாவும் இப்படி மாறுவாள்*
*என்று நினைக்கவேயில்லை நான்*

*கி.ரா.வின் கன்னிமை கதை இப்படித் தான் தொடங்குகிறது. மணமாவதற்கு முன் அன்னை தெரசாவாக இருந்த நாச்சியாரம்மா, குழந்தைகளுக்குத் தாயான பின் இயல்பு வாழ்க்கையில் நாம் காணும் மிகச் சாதாரணப் பெண்ணாக மாறி விடுகிறாள். மும்மூர்த்திகளாலும் பெண்ணைப் புரிந்து கொள்ள முடியாது என சீதை யுத்த காண்டத்தில் குறிப்பிடுகின்றாள். திருமணத்திற்குப் பின் ஏதோ ஒன்று அவளிடம் இல்லை என்று சகோதரனும், தன் தேவைகளை குறிப்பு அறிந்து செய்த தன்மனைவி, இப்பொழுது* ***சொன்னாலும்*** *செய்வதில்லை என கணவனும் பழைய நாச்சியம்மாவைத் தேடுகிறார்கள்.*

**வட்டார இலக்கியமும் கி.ராஜநாராயணனும்**

*கரிசல் சமூகத்தில் பெண் திருமகளாக உருவகிக்கப்படுகிறாள். பணக்கார வீட்டுப் பெண்ணாயிலும் ஏழை வீட்டுப் பெண்ணாயிலும் கரிசல் வட்டாரப் பெண்ணிடம் உழைப்பு என்னும் செல்வம் நிறைந்து கிடக்கின்றது. கரிசல் பு+மியின் விவசாய அமைப்புக்கு அவளுடைய உறுதுணை இன்றியமையாததாக அமைகின்றது. கரிசல் காட்டுப் பெண் உழைப்பில் ஆணுக்கு பங்காளியாக நிற்கிறாள். கரிசல் காட்டில் பெண் இவ்வாறு உழைப்பில் சமபங்கு ஏற்பதால் தானோ என்னவோ அவள் உடைமை உணர்வு மிகுந்தவளாகக் காணப்படுகிறாள். அவளுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கும் உடைமை உணர்வும் அவளுக்கென ஒரு குடும்பம் அமைந்த பிறகே தலை தூக்குகிறது. கரிசல் பெண்ணின் இவ்விருவேறு தன்மைகளைக் ''கன்னிமை'' கதையில் கி. ராஜநாராயணன் சிறப்புறச் சித்திரித்திருக்கிறார்.*

**நாச்சியாரம்மாள் '''மனுஷியாகிக் கன்னிகாத்த அந்த நாட்கள்''**

***மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே மணிமேகலை பாடல் எண்-95***

*''பெண்ணடி'' யில்லை என்பதற்காக ஒரு பெண் குழந்தையைத் தந்து எடுத்துக் கொள்ளும் வழக்கத்தைக் கரிசல் சமூகம் கொண்டிருந்தது எனவே என் தாய் நாச்சியரம்மாளைத் தத்து எடுத்துத் தன் மகளாக்கிக் கொண்டாள் என குறிப்பிடும் அவள் சகோதரா; அவள் ''மனுஷி'' யாகி எங்கள் வீட்டில் கன்னிகாத்த அந்த நாட்கள் எங்கள் குடும்பத்துக்கே பொன்னாட்கள் என்கிறார்.*

*வேலைக்காரர்களுக்குக் கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால்தான் திருப்தி. நிறைய்ய மோர்வுட்டுக் கம்மஞ்சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகு வத்தலைப்*

*பக்குவமாக எண்ணெயில் வறுத்துக் கொண்டு வந்து வைத்து விடுவாள். சருவச் சட்டியிலிருந்து வெங்கலச் செம்பில் கடகடவென்று ஊற்ற, அந்த மிளகு வத்தலை எடுத்து வாயில் போட்டு நொறு நொறு வென்றுமென்று கொண்டே, அண்ணாந்து கஞ்சியை விட்டுக்கொண்டு அவர்கள் ஆனந்தமாய்க் குடிக்கும்போது பார்த்தால், ''நாமும் அப்படிக் குடித்தால் நன்றாக இருக்கும் போலிருக்கிறதே!'' என்று தோன்றும்.*

*ஒரு நாளைக்கு உரித்த பச்சை வெங்காயம் கொண்டு வந்து ''கடித்துக்'' கொள்ள கொடுப்பாள். ஒரு நாளைக்குப் பச்சை மிளகாயும், உப்பும், பச்சை மிளகாயின் காம்மைப் பறித்து விட்டு அந்த இடத்தின் சிறிது கம்மங்கஞ்சியைத் தொட்டு அதை உப்பில் தோய்ப்பார்கள். உப்பு அதில் தாராளமாய் ஒட்டிக் கொள்ளும். அப்படியே வாயில் போட்டுக்கொண்டு கசமுச என்று மெல்லுவார்கள். அது கஞ்சியைக் ''கொண்டா கொண்டா'' என்று சொல்லுமாம்! இரவில் அவர்களுக்கு வெதுவெதுப்பாகக் குதிரை வாலிச்சோறு போட்டு தாராளமாக பருப்புக்கறி விட்டு நல்லெண்ணெயும் ஊற்றுவாள். அதுக்குப் புளி ஊற்றி அவித்த சீனியவரைக்காய் வெஞ்சனமாகக் கொண்டு வந்து வைப்பாள். இரண்டாந்தரம் சோற்றுக்குக் கும்பா நிறைய ரஸம். ரஸத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை அவர்கள் கைநிறைய எடுத்துப் பிழிந்து உண்பார்கள்.*

*உயர்ந்த ஜாதி நெத்திலி தலைகளைக் கிள்ளி நீக்கிவிட்டுக் காரம் இட்டு வறுத்துக் கொடுப்பாள். அந்தப் பொன்வறுவல் பக்குவம் யாருக்கும் கைவராது. பருப்புச் சோறுக்கு உப்புக்கண்டம் வறுத்து வைப்பாள் ரஸ சாதத்துக்கு முட்டை அவித்துக் காரமிட்டுக் கொடுப்பாள். திரண்ட கட்டி வெண்ணையை எடுத்துத் தின்னக் கொடுப்பாள்.*

***''பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்''** என்பது பழமொழி வேலைக் காரா;களுக்கும் மட்டுமில்லை, பிச்சைக்காரா;களுக்குக் கூட நாச்சியாரம்மா என்றால் குலதெய்வம் தான் அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்குப் படைத்துப் படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்தி.*

***''குடிப் பிறப்பு அழிக்கும்: விழுப்பம் கொல்லும்:<br>பிடித்த கல்விப் பெரும்புனை விடூ உம்:<br>நான் அணிகளையும்: மாண் எழில் சிதைக்கும்:<br>பூண் அணி மாதரோடு புறங்கடை நிறுத்தும்<br>பசிப்பிணி என்னும் பாவி''                    மணிமேகலை-80***

*இந்த மணிமேகலைப் பாடல் பசி என்னும் பாவி புரியும் தீமைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. நாச்சியாரம்மாள் தன் குடும்ப உறுப்பினா;களின் பசியை மட்டும் அல்ல, தன்னைத் தேடி வந்த அனைவரின் பசியைப் போக்கியிருக்கிறாள்.*

*சுந்தரத்தேவன் என்ற கொலைகாரனின் மகனை நாச்சியரம்மாளின் தகப்பனார் அவர்கள் புஞ்சையில் ''வாங்கித்திங்க'' பருத்திச்சுளை எடுத்தான் என்றதுக்கு ஊனுக்கம்பால் அடி நொறுக்கி எடுத்து விடுகின்றார். பையனை கட்டிலில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து அவனுடைய வீட்டில் கிடத்தி விட்டார்கள். சுந்தரத்தேவன் வெட்டரிவாளை எடுத்துக் கொண்டு வந்து நாச்சியரம்மாள் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான்.*

*நாச்சியாரம்மா சுந்தரத்தேவன் வீட்டிற்குச் சென்று சிறுவனை மூர்ச்சை தெளிவித்தாள். வீட்டிலிருந்த புளித்த மோரை வருத்திச் சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். மஞ்சணத்தி இலைகளைப் பறித்துக் கொண்டு வரச் சொன்னாள். சுவரொட்டி இலைகளை வாட்டிப் பக்குவப்படுத்திக் காயங்களைக் கட்டினாள், பின்பு வீட்டுக்கு வந்து, பத்துப் பக்கா நெல் அரிசியும், இரண்டு கோழிகளையும் கொடுத்தனுப்புகிறாள். வீட்டில் இருந்த அனைவரும் ஒன்றும் பேசாமல் ஊமைகளைப் போல் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இவ்வாறு அனைவருக்கு உதவும் பரோபகாரியாக கொலைகாரனையும், சாந்தப்படுத்தக் கூடியவளாக இருக்கிறாள்.*

**நாச்சியரம்மாளின் திறமைகள்**

*மார்கழி மாதம் பிறந்துவிட்டால் வீட்டினுள்ளும் தெருவாசல் முற்றத்திலும் தினமும் வகை வகையான கோலங்கள் போட்டு அழகுபடுத்துவள். அதிகாலையில் எழுந்து நீராடி திவ்யப் பிரபந்தம் பாடுவாள். திருப்பாவைப் பாடல்களைப் பாடுவாள். கம்பராமாயண வசனப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு இரவு வெகு நேரம் வரைக்கும் பெண்கள் புடைசூழ உரக்க ராகமிட்டு வாசிப்பாள். கல்யாணத்துக்கு முன் நாச்சியாரு, நிறை கண்ணிப்பிள்ளை சேகரித்து மெத்தைகள், தலையணைகள் தைப்பாள். மெத்தைகளிலும் தலையணை உறைகளிலும் பட்டுநூலால் வேலைப்பாடுகள் செய்வாள்.*

**நாச்சியாரம்மாவும் பருத்தியும்**

*காட்டில் பருத்தி எடுக்கும் பெண்கள் காட்டுப் பாடல்கள் பாடுவார்கள். அவர்களிடையே நாச்சியாரம்மாவும் நிரைபோட்டுப் பருத்தி எடுப்பாள். பருத்தி காடாய் வெடித்துக் கிடக்கும். பச்சை வானத்தில் நட்சத்திரங்களைப் போலே நாச்சியாரம்மா, பருத்தியைக் கருவரத்து நிழலில் கூறு வைத்துக் கொடுப்பாள். மடிப்பருத்தி, பிள்ளைப்பருத்தி, போடு பருத்தி என்று பகிர்ந்து போட, பள்ளுப்பெண்கள் சந்தோஷமாக நாச்சியாரம்மாவை வாழ்த்திக் கொண்டே வாங்கிச் செல்வார்கள். பள்ளுப்பெண்கள் யார் வந்து கூறு வைத்துக் கொடுத்தாலும் ஒப்பமாட்டார்கள். நாச்சியாரம்மா தான் வேணும் அவர்களுக்கு. முதல் விளைச்சலில் ஒரு பகுதியைச் சாமிக்குக் காணிக்கையாகச் சோ;க்கும் வழக்கம் கரிசல் பகுதியில் இருக்கிறது. பருத்தி எடுத்துத் திரும்பி வீடு நோக்கி வந்து கொண்டிருக்கையில் தொட்டேரம்மா கோயிலின் இலந்தை முள் கோட்டையின் மேல் நாச்சியாரம்மா ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்திப் பயபக்தியோடு போட பின்னால் வந்த பள்ளுப் பெண்கள் குலவையிட்டனா; என்ற செய்தி விளைச்சலை கடவுளுக்கு படைக்கும் அவர்களின் நம்பிக்யைக் குறிப்பிடுகின்றது.*

**திருமணத்திற்குப் பின் நாச்சியாரம்மாள்**

*திருமணத்திற்குப் முன்பு வள்ளலாக இருந்த நாச்சியாரம்மா திருமணத்திற்குப் பின்பு சுயநலக்காரியாக மாறிவிடுகிறாள். ஏகாலிக்கும், குடிமகளுக்கும் சோறுபோட எழுந்திருக்கும் போது முகம் சுளிக்கிறாள். குழந்தைக்குப் பாலூட்டும் போதோ அல்லது தான் சாப்பிட உட்காரும் போதோ பார்த்துத்தான் அவர்கள் சோறு வாங்கிப் போக வருகிறார்கள்; தினமும் என்று புலம்புகிறாள். பிச்சைக்காரர்களுக்கு ''வாய்தாப்'' போடுகிறாள். வேலைக் காரர்களின் மேல் எரிந்து விழுகிறாள். 'அப்பப்பா' என்ன தினி தின்கின்றார்கள் ஒவ்வொருத்தரும் என்று வாய்விட்டே சொல்லுகின்றாள்.*

*குடுகுடுப்பைக்காரன் இப்பொழுதெல்லாம் அட்டகாசமாக வந்து அவள் தலை வாசலில் வெகு நேரம் புகழ்வதில்லை. பெருமாள் மாட்டுக்காரன் தன் மாட்டுக்கு கம்மஞ் சோற்றையும் பருத்திக் கொட்டையையும் தவிட்டையும் கலந்து வைக்கும் அந்த "நாச்சியார்" எங்கே போனாள் என்று தேடிக் கொண்டிருக்கிறான்.*

*நாச்சியாரின் சகோதரன் அவளை திருமணம் செய்து கொடுத்து அனுப்பிவிட்டோம். அந்த ஒன்று இப்பொழுது எங்கள் நாச்சியாரம்மாவிடம் இல்லை, அது அவளிடமிருந்து போயே போய்விட்டது என்கிறார். அடுத்து நாச்சியாரம்மாளின் கணவன் நாச்சியாரம்மாள், இப்பொழுது ரெட்டிப்புக் கலகலப்பாக உண்மையாகவே இருக்கிறாள். என் குடும்பத்தைப் பிரகாசிக்கச் செய்கிறாள். எங்கள் கல்யாணத்துக்கு முன்பு எனக்கு இருந்த நாச்சியாரம்மாள், இப்பொழுது இருக்கும் என் நாச்சியாரம்மாள். "நான் அந்த அவளைத்தான் மிகவும் நேசிக்கின்றேன். இப்பொழுது தெல்லாமல் குழந்தைகளையும் குடும்பத்தையும் சதா கவனிக்கும் சுயநலவாதி ஆகிவிட்டாள். எங்கோ ஓர் இடத்தில் கோளாறாகி விட்டது என்கிறார். ஒரு நாள் கோவில்பட்டிக்குப் போய் நிறைய சாமான்கள் வாங்கி வருகிறான். நாச்சியாரம்மாளின் கணவன், நல்ல காய்ச்சல் அவனுக்கு நாச்சியாரம்மாள் கணக்கில் ஒரு ஐந்து ரூபாய் சொச்சம் உதைக்கின்றது என கணக்கு கேட்கிறான். அவன் எல்லாவற்றையும் எடுத்துவை காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்கிறார். அவள் பிடிவாதமாகக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவருக்கு உயர்ந்த காய்ச்சலின் போதை இடை விடாது மீட்டப்படும் சுருதிபோல் லயிப்பு மயமாக இருக்கிறது. அந்த ஆனந்தத்தில் பங்கு கொள்ள அவருக்கு ஒரு துணைவேண்டும் போல் இருக்கிறது. அவள் எங்கே ? அவள் தான் என் அருமை நாச்சியாரு.*

*நாச்சியாரு, என் பிரியே! நீ எங்கிருக்கிறாய் ? என அருகில் அமர்ந்து காசு கணக்குப் பார்த்துக் கொண்டு இருக்கும் நாச்சியாரம்மாவைப் பார்த்து கணவன் மனதிற்குள், முனுமுனுக்கின்றான்.*

**பெண்ணும் குழந்தையும்**

***"பெண்களுக்கு ஞானத்தை வைத்தான் ஈசன்"*** *என்றார்* ***பாரதி.*** *தனக்கு ஒரு குடும்பம், பின்பு குழந்தை என்று வந்தவுடன் பெண் தன்னையும் தன் சுற்றத்தாரையும் அந்தக் குழந்தைக்கு சேவை செய்ய மட்டுமே பிறப்பெடுத்தவர்கள் என்று நினைக்கின்றாள் பிணத்திற்கு மேல் இருந்து மந்திர உச்சாடனம் செய்தால் அரச பதிவி கிடைக்கும் என்று தன் குழந்தையை தனக்கு மேலே அமரவைத்து மந்திரம் சொல்லச் சொல்லி, பின்பு அப்படியே தன்னை மாய்த்துக் கொண்ட தாயைப்பற்றி நம் புராணக்கதைகள் சொல்லுகின்றன. ஒரு பெண்ணின் உடல், உள்ளம், ஆன்மா அனைத்தும் தன் குழந்தையைச் சுற்றியே இயங்குகின்றது. அதனால் தான் அன்னபூரணியாக அன்பின் உருவமாக விளங்கிய நாச்சியாரம்மாள் மூன்று குழந்தைகளுக்குத் தாயான பின் சுயநலத்தின் வடிவமாக மாறிவிடுகிறாள்.*

**முடிவுரை**

***கவியுரைத்த கற்பனைப்போல்***
***கைப் பிடித்த பு+ங்கொடியாள்***
***பொய்யுரைத்த கவிதையைப் போல்***
***போன கதை என்ன சொல்வேன்.*** ***- கண்ணதாசன்***

*திருமணமாவதற்கு முன்பு தன் வாழ்க்கைக்குள் வரப்போகும் ஆணை மாற்றி விடலாம் என்று பெண்ணும், தான் சந்தித்த போது அல்லது பழகிய போது இருந்த குணங்களுடன் பெண் அப்படியே இருந்து விடுவாள் என்று ஆணும் நம்புகின்றார்கள். ஆனால், எதார்த்த வாழ்வில் பெண் சூழ்நிலைக்குத் தக்கப்படி தன்னை மாற்றிக் கொண்டே வருகிறாள். தன்னை தகவமைத்து கொள்ளுவது மட்டும் அல்லாமல் குடும்பத்தை தன் வாரிசுகளை உருவாக்க அரும்பாடுபடுகிறாள் அதனால் வேறு எந்தப் புற விசயங்ளைப் பற்றி அவள் அலட்டிக் கொள்வதே இல்லை. உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களும் தன் வாரிசுகளுக்கு கிடைத்து விட வேண்டும் என பெரும் பாடுபடுகிறாள். கண்ணை இமை காப்பது போல தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். பெரும்பாலான ஆண்கள் அப்படியே இருந்து விடுகின்றார்கள்.*

**துணை நூற் பட்டியல்**


1. *கூல வாணிகன் சாத்தனார், மணிமேகலை, மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை - 14.*
2. *தேசிக விநாயகம் பிள்ளை.சி, மலரும் மாலையும், பாரி நிலையம், 184-பிராட்வே, சென்னை - 600 108.*
3. *ராஜ நாராயணன். கி, மாயமான் காலச்சுவடு, நாகர் கோவில் 2021.*


## Reference


1. Kulavanigan Shathanar, Manimegalai Mulamum, Uraiyum, Saratha Pathipagam, Chennai.
2. Thesiga Vinayagam Pillai.C, Malarum Malaiyum, Pari Nilaiyam, 184 Biradway, Chennai.
3. Raja Narayanan. K, Mayaman Kalasuvadu, Nagarkoil.